**பேருவளை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேருவளை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

2010 சனவரி 19 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. பீஈடீ 54 இன் பிரகாரம் சகல உள்ளூராட்சி நிறுவகங்களாலும் தமது நிதிக்கூற்றுக்கள் அரச துறைக் கணக்கீட்டு நியமத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக சபையால் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது கைத்தொழில் கடன்கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 642,961 தொகையான கைத்தொழில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படாது செலவுக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பட்ட தவறைச் சீராக்குவதற்கு கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டின் செலவினக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காகிதாதிக் களஞ்சிய இருப்பு பேரேட்டின் 06 விடயங்களான ரூபா 223,450 தொகையான இருப்பு மீதி காணப்பட்ட போதிலும் இருப்புப் பட்டோலையின் படி அவ் விடயங்களின் மீதி ரூபா 147,600 ஆகக் காணப்பட்டமையால் பொதுக் களஞ்சிய வழங்கல்கள் ரூபா 75,850 தொகையால் அதிகரித்தும் களஞ்சிய மீதி அப் பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக சம்பளம் மீளளிப்பாக ரூபா 47,148,535 தொகை கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் சம்பள மீளளிப்புப் பட்டியலிடலாக ரூபா 67,907,003 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் பெறவேண்டிய சம்பள மீளளிப்புக் கணக்கு மீதி ரூபா 20,758,468 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மின்சாரக் களஞ்சிய இருப்புப் பதிவேடு MV சோக் இற்காக ரூபா 25,740 தொகையான மீதி காணப்பட்ட போதிலும் இருப்புப் பதிவேட்டில் இதற்காக ரூபா 5,940 தொகையான ஓர் மீதி காண்பிக்கப்பட்டிருந்தமையால் மின்சாரக் களஞ்சிய வழங்கல்கள் ரூபா 19,800 அதிகமாகவும், மின்சார களஞ்சிய இருப்பு மீதி அத் தொகையால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் சம்பள மீளளிப்பின் மூலம் அறவிடப்படும் அடிப்படையில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,456 தொகையான கப் வண்டிக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 706,272 தொகையான கடன் தவணைப்பணம் மூலதனச் செலவினக் கணக்கிற்கு வரவு வைப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் கப் வண்டியின் மொத்தப் பெறுமதி மூலதன செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அவ் இரு கணக்கு மீதிகள் ரூபா 2,472,184 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 127,861,170 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 66,345,982 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,901,837 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 15,488 | 9,826 | 11,302 |
| (ii) | வாடகை | 13,409 | 10,800 | 3,758 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,682 | 1,654 | 28 |
| (iv) | ஏனைய வருமானம் | 45,000 | 32,371 | 19,068 |

**2.2.2 வீதவரி**

2013 ஒக்டோபர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 7,543,992 தொகையான வீதவரி நிலுவையாகக் காணப்பட்டது. அம் மீதியில் 5 வருடங்களுக்கு மேலான காலமாக நிலவிவரும் நிலுவை மீதி ரூபா 1,023,731 தொகையாகவும் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 6,314,340 ஆகவும் காணப்பட்டது.

**2.2.3 கடை வாடகை**

(அ) மக்கொன பொதுச் சபையின் 04 கடைகளில் 05 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான கால வீச்சிற்குரித்தான நிலுவை வாடகை ரூபா 11,850 தொகையும் பொதுச் சந்தைத் தொகுதியின் 18 கடைகளில் 03 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான கால வீச்சிற்குரித்தான நிலுவை வாடகை ரூபா 239,200 தொகையும் 2013 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) விலைகள் கிடைக்கப்பெற்றிராத 8 மரக்கறி வியாபார நிலையங்களிற்காக மீள கேள்வி மனுக்கோரப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 07 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாரச் சந்தையில் பழைய கடை இல. 06 மற்றும் புதிய வியாபாரத் தொகுதியின் 8 கடைகளும் 2012 யூலை 31 ஆம் திகதி சபையால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் அவை பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) 2002, 2003 ஆம் 2007 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை இரத்தாகியிருந்த பயாகல உப அலுவலகத்தின் மக்கோன பொது சந்தையின் 03 கடைகளும் சிறிய பயாகல மீன் சந்தையின் உடன்படிக்கை திருத்தப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 16,439,536 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 29,728,986 |

**2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

குப்பைகளைச் சமப்படுத்தும் செயற்பாட்டிற்காக வாடகை அடிப்படையில் சேன் லோடர் ஒன்று பெற்றுக்கொள்ளப்படுவதற்காக சபையால் 2010 சனவரி முதல் 2013 திசெம்பர் வரை ரூபா 8,192,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் சேன் லோடர் ஒன்று கடன் அடிப்படையில் அல்லது கொள்வனவு செய்யப்படுவதற்காக சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், சபையால் புதிய வீதியைச் செப்பனிடும் ஓர் இயந்திரம் ரூபா 9,016,253 இற்கு 2013 யூலை 23 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வீதி செப்பனிடும் இயந்திரம் சபையிடம் இருக்கையில் புதிய வீதி செப்பனிடும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதன் மூலம் சேன் லோடர் ஒன்று கொள்வனவு செய்யப்படும் தேவைப்பாடு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) 2013 மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கொங்கிரீட் கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்காக துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் ரூபா 22,573,000 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த 30 வீதிச் செயற்திட்டங்கள் 2014 சனவரி 17 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 நவம்பர் 08 ஆம் திகதி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது மீனாட்சி மலை 2 ஆம் கட்டத்தின் கீழ் 98.4 மீற்றர்களும், இலங்கந்த சிறார் பாடசாலைக்கு எதிரே வீதியின் நீளம் 87.5 மீற்றர்களும் கொங்கிரீட் பதிக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு கட்டத்திலும் மறுசீரமைக்கப்பட்ட பகுதிகள் குறிப்பாக இனங்காணப்படும் வகையில் வீதித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமையால் சபையால் மறுசீரமைக்கப்பட்ட பகுதி உறுதியாக இனங்காணப்படுவதற்குச் சிரமமாகக் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**(அ) முற்பணக் கொடுப்பனவுகள்**

2008 முதல் 2012 வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 479,625 தொகையான முற்பணக் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 13 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) நீர்க் குழாய்களை ஸ்தாபித்தல்**

அளுத்கம பூர்வாராம வீதியின் புகையிரத குறுக்குப் பாதையின் அருகாமையில் நீர்க்குழாய் ஸ்தாபிக்கப்படுவதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மூலம் சேதமாக்கிய வீதியை மீள மறுசீரமைப்பதற்காக ரூபா 400,000 தொகையான செலவின மதிப்பீடொன்று 2013 மார்ச் 15 ஆம் திகதி சபையால் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை சபைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு வீதி மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) வாகனக் கட்டுப்பாடு**

(i) சபையிடமிருந்த 11 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் வாகனங்களுக்கு எரிபொருள் கட்டளைகள் பரிந்துரைக்கப்பட்டு ரூபா 3,551,770 தொகையான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கப் வண்டியொன்று முற்றாகத் திருத்தப்படுவதற்காக 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதி கோரப்பட்டு அன்றைய தினமே அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கையில் அன்றைய தினமே கியர் பொக்ஸ் பழுதுபார்க்கப்படுவதற்காக ரூபா 101,788 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் அவ் வண்டி பழுதுபார்க்கப்பட்டு மீளக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வாகனம் தொடர்பான ஓர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையிடமிருந்த எந்த ஒரு வாகனம் தொடர்பாகவும் லொக் புத்தகம் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(v) வாகனம் பழுதுபார்க்கப்படுகையிலோ அல்லது மேலதிக உதிரிப்பாகங்கள் பொருத்தப்படுகையில் அகற்றப்பட்ட மேலதிக உதிரிப்பாகங்கள், பொருத்திகள் தொடர்பான விபரம் காண்பிக்கப்பட்டு ஓர் பட்டோலை பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 300,000 பெறுமதியான டிரேலரும் 2013 யூலை 23 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9,016,253 பெறுமதியான வீதி செப்பனிடும் இயந்திரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 203 மற்றும் 217 இன் படி சபையிடமுள்ள காணி கட்டிடங்கள் தொடர்பான ஓர் மெய்மையாய்வும் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் வருடாந்த

பொருள் மெய்மையாய்வு கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உடைந்து செயலிழந்த நிலையில் உள்ள பிரதியிடும் இயந்திரமொன்றும், ரோனியோ இயந்திரமொன்றும், பக்ஸ் இயந்திரமொன்றும், கைவிரலடையாள இயந்திமொன்றும் 3 தட்டச்சு இயந்திரங்களும் பல வருட காலமாக களஞ்சியத்தில் உக்கிய நிலையில் காணப்பட்டது.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) பாதீடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு